பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 41

கடந்த 04.07.2026 முதல் 10.07.2026 வரை தமிழகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையால் 7 பொறிவைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அலுவல் ரீதியான பணிகளைச் செய்வதற்காக லஞ்சம் கேட்டு பெற்ற அரசு ஊழியர்கள் (இளநிலை உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர், இரண்டாம் நிலை காவலர், காவல் உதவி ஆய்வாளர், கிராம உதவியாளர், உதவியாளர், மற்றும் சர்வேயர் ஆகியோர்கள்) கைது செய்யப்பட்டனர்.

மேலும் கிருஷ்ணகிரி, திருவள்ளூர், தேனி, கன்னியாகுமரி, திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள 11 இடங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வு குழு அலுவலர்களுடன் இணைந்து அரசு அலுவலகங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அலுவலகங்களிலிருந்து கணக்கில் வராத ரொக்கம் ரூ.12,46,080/- கைப்பற்றப்பட்டது. மேலும் மாநில எல்லைகளில் அமைந்துள்ள 6 வாகன சோதனை சாவடிகளில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.9,87,890/- கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் திடீர் சோதனைகளில் ரூ.22,33,970/- கைப்பற்றப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விழுப்புரம் ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் கையூட்டு வழக்கில் அப்போதைய தாசில்தார், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம் மற்றும் தாசில்தார் ஓட்டுநர் ஆகியோருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் ரூ.1,000/- அபராதமும் விதித்தது.

1. 07.07.2026 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் புகார்தாரருக்கு புதிதாக வீடு கட்டுவதற்காக கட்டிட வரைபட அனுமதி வழங்க திரு.பாலமுருகன், இளநிலை உதவியாளர், பேரூராட்சி அலுவலகம், திருவெண்ணைநல்லூர் தாலுகா, விழுப்புரம் மாவட்டம் அவர்கள் ரூ.15,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

2. 07.07.2026 அன்று திருப்பூர் மாவட்டத்தில் புகார்தாரரின் புதிதாக வாங்கிய நிலத்திற்கு காட்டன் பட்ஸ் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்ய திரு.நிசார் அப்துல் ரகுமான், கிராம நிர்வாக அலுவலர், பொங்குபாலயம் கிராமம், பொறுப்பு தொட்டிபாளையம் கிராமம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் ரூ.5,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

3. 09.07.2026 அன்று சென்னை மாவட்டத்தில் புகார்தாரரின் இரு சக்கர வாகனத்தின் உரிமத்தை திருப்பி கொடுக்க திரு.அழகுராஜா, இரண்டாம் நிலை காவலர், ஜே.7 வேளச்சேரி போக்குவரத்து காவல் நிலையம், சென்னை பெருநகர காவல் அவர்கள் ரூ.1,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

4. 09.07.2026 அன்று சிவகங்கை மாவட்டத்தில் புகார்தாரருக்கு திருமணம் செய்துவைக்க திரு.சத்தியமூர்த்தி, காவல் உதவி ஆய்வாளர், திருப்புவனம் காவல் நிலையம், சிவகங்கை மாவட்டம் அவர்கள் ரூ.3,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

5. 09.07.2026 அன்று சிவகங்கை மாவட்டத்தில் புகார்தாரருக்கு உட்பிரிவு பட்டா மாற்றம் செய்ய திரு.கணேசன், கிராம உதவியாளர், சிவகங்கை மாவட்டம் அவர்கள் ரூ.3,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

6. 10.07.2026 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் புகார்தாரருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய திரு.ஆரோன், உதவியாளர், கள்ளக்குறிச்சி தாலுகா அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ரூ.2,500/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

7. 10.07.2026 அன்று தென்காசி மாவட்டத்தில் புகார்தாரருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய திரு.சங்கர், சர்வேயர், பீரனூர் கிராமம், செங்கோட்டை தாலுகா, தென்காசி மாவட்டம் அவர்கள் ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்றபோது கைது செய்யப்பட்டார்.

அரசு அலுவலகங்களில் நடைபெற்ற திடீர் சோதனைகள்

1. கடந்த 04.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை ராணிப்பேட்டை பிரிவு அலுவலர்கள் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.1,82,800/- கைப்பற்றப்பட்டது.

2. கடந்த 07.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி பிரிவு அலுவலர்கள் ஓசூர் ஜுஜுவாடி வாகன சோதனை சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.3,40,000/- கைப்பற்றப்பட்டது.

3. கடந்த 08.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருவள்ளூர் பிரிவு அலுவலர்கள் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து பெத்திகுப்பம் சோதனை சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.4,32,450/- கைப்பற்றப்பட்டது.

4. கடந்த 08.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தஞ்சாவூர் பிரிவு அலுவலர்கள் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுகா, சாலியமங்கலம் நெல் நேரடி கொள்முதல் நிலையத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.12,880/- கைப்பற்றப்பட்டது.

5. கடந்த 08.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திண்டுக்கல் பிரிவு அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலகம் தொப்பம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம், அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.4,36,250/- கைப்பற்றப்பட்டது.

6. கடந்த 09.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி பிரிவு அலுவலர்கள் பாகலூர் என்ற நல்லூர் வாகன சோதனை சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.1,77,000/- கைப்பற்றப்பட்டது.

7. கடந்த 10.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தேனி பிரிவு அலுவலர்கள் முந்தல் வாகன சோதனை சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.3,500/- கைப்பற்றப்பட்டது.

8. கடந்த 10.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தேனி பிரிவு அலுவலர்கள் போடிமெட்டு வாகன சோதனை சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.5,000/- கைப்பற்றப்பட்டது.

9. கடந்த 10.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தேனி பிரிவு அலுவலர்கள் குமுளி வாகன சோதனை சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.26,440/- கைப்பற்றப்பட்டது.

10. கடந்த 10.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கன்னியாகுமரி பிரிவு அலுவலர்கள் களியக்காவிளை வாகன சோதனை சாவடியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.3,500/- கைப்பற்றப்பட்டது.

11. கடந்த 10.07.2026 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தஞ்சாவூர் பிரிவு அலுவலர்கள் ஒரத்தநாடு வட்டார வேளாண்மை அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.6,14,150/- கைப்பற்றப்பட்டது.

ஊழல் வழக்கில் 04.07.2026 முதல் 10.07.2026 நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனைகள்

விழுப்புரம் ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் கையூட்டு வழக்கில் திரு.ஆதிபகவான், அப்போதைய தாசில்தார், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம் மற்றும் திரு.கந்தசாமி, ஓட்டுநர் ஆகியோருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் ரூ.1,000/- அபராதமும் விதித்து 10.07.2026 அன்று தீர்ப்பளித்தது
